**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 583 of 2017

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : ஜெயக்குமார்

Father's Name : சின்னப்பன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of April** 2026.

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் சோமனூர் கரவழி மாதாப்பூரில் குடியிருந்து கொண்டு நூல் வியாபாரம் செய்து வருகிறேன். 10 ம் தேதி 2016-ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை மதியம் சுமார் 02.00 மணியளவில் எனது மனைவி சொந்தமான கட்டிட வேலையில் இருந்த வேலை ஆட்களுக்கு டீ கொண்டு செல்வதற்காக வீட்டில் டீ போட்டுக் கொண்டு சென்று கொண்டிருந்த பொழுது, எனக்கு எனது மனைவியின் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபொழுது எனது மனைவியிடம் என்னவென்று கேட்க எனது மனைவி இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் எனது மனைவி அணிந்திருந்த தங்க செயினை பறித்து சென்று விட்டதாக கூறினார். நாங்கள் அருகில் இருந்த கம்பெனியில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை சென்று பார்வையிட்டோம். மேற்படி கேமராவில் பதிவுகள் சரியாக

தெரியவில்லை. ஆகவே நானும் எனது மனைவியும் அன்றைய தினமே மாலை கருமத்தம்பட்டி காவல் நிலையம் சென்று நான் புகாரை எழுத எனது மனைவி கையொப்பம் செய்து புகார் அளித்தார். பின்னர் ஆறு மாதங்கள் கழித்து போலீசார் எங்களுடைய நகை கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். பின்னர் எனது மனைவி நீதிமன்றத்தில் மனு செய்து நகையை பெற்றுக் கொண்டார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தேன். நான் எனது மனைவியின் சத்தம் கேட்டு நான் எனது மனைவியிடம் சென்று பார்த்த பொழுது நான் மட்டும் இருந்தேன் வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல இரண்டு நபர்கள் இருந்தார்கள். அப்பொழுது எனக்கு எனது மனைவியின் செயின் யார் பறித்துச் சென்றார்கள் என்ற விபரம் தெரியாது. எனது மனைவியின் செயின் காணாமல் போனதற்காக எனது மனைவி கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சி மறுக்கிறேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**